ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2489/10 - 2026 මැයි මස 18 වැනි සඳුදා - 2026.05.18

2489/10 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தேசிய பெறுகை ஆணைக்குழு**

பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனையல்லாத சேவைகள் பற்றிய 2024 இன் பெறுகை வழிகாட்டல்களுக்கான திருத்தங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் உறுப்புரை 156இ(1) இன் பிரகாரம், தேசிய பெறுகை ஆணைக்குழுவால் வெளியிடப்படுகிறது

அரசாங்க நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனையல்லாத சேவைகள் ஆகியவற்றின் பெறுகையுடன் நேரடியாக மற்றும் இடைநேர் நிகழ்வுடன் தொடர்புடைய வழிகாட்டுதல்கள்

தேசிய பெறுகை ஆணைக்குழு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் உறுப்புரை 156இ(1) இன் பிரகாரம் அதற்கென ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளின்படி, அரசாங்க நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனையல்லாத சேவைகள் ஆகியவற்றின் பெறுகையுடன் நேரடியாக மற்றும் இடைநேர் நிகழ்வுடன் தொடர்புடைய வழிகாட்டுதல்களை இத்தால் வெளியிடுகின்றது.

25.11.2024 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட 2412/01 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 01.01.2025 தொடக்கம் நடைமுறையிலுள்ளதுமான பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனையல்லாத சேவைகள் ஆகியவற்றின் பெறுகைக்கான பெறுகை வழிகாட்டுதல்கள் - 2024 இல் பின்வரும் திருத்தங்கள் உள்ளடக்கப்பட வேண்டியவையாகும்.

தேசிய பெறுகை ஆணைக்குழுவின் கட்டளையின்படி.

**டி.சி. சிறிபத்தான,**
பொதுச் செயலாளர்,
தேசிய பெறுகை ஆணைக்குழு.

2026, ஏப்பிறல் 09.

25.11.2024 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட 2412/01 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 01.01.2025 தொடக்கம் நடைமுறையிலுள்ளதுமான, பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனையல்லாத சேவைகள் ஆகியவற்றின் பெறுகைக்கான பெறுகை வழிகாட்டுதல்கள் - 2024 இல் பின்வரும் திருத்தங்கள் இணைக்கப்படுகின்றன.

| தொடர் இல | அத்தியாயம் | பிரிவு | திருத்தப்பட வேண்டிய மொழி | முன்வைக்கப்படும் திருத்தம் |
|---|---|---|---|---|
| 01 | | வரைவிலக்கணம் | சிங்களம் | “நடைமுறைப்படுத்தப்படும் திகதி" என்பது பற்றிய பின்வரும் வரைவிலக்கணமானது சிங்கள் மொழியிலான வழிகாட்டல்களில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.<br><br>அந்த திகதியில் நடைமுறையிலிருக்கும் எல்லாப் பெறுகை வழிகாட்டல், பெறுகைக் கையேடு, சுற்றறிக்கைகள், பணிப்புரைகள் ஆகியவற்றைப் பதிலீடு செய்து இந்த வழிகாட்டுதல்கள் நடைமுறைக்குவரும் திகதியைக் குறிக்கும். நடைமுறைக்குவரும் திகதியானது, இவ் வழிகாட்டுதல்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர், தேசிய பெறுகை ஆணைக்குழுவால் குறித்துக்கூறப்படும் திகதியாக இருத்தல் வேண்டும். |
| 02 | 01,04,05 | வரைவிலக்கணம்,<br>பிரிவு 1.5 (அ)<br>பிரிவு 1.5.4 (அ)<br>பிரிவு 4.1.1 (அ)<br>பிரிவு 4.1.4 (ஆ)<br>பிரிவு 5.9 (ஆ) | ஆங்கிலம் | "Procurement Entity"என்ற பதம், ஆங்கில மொழியிலான இவ் வழிகாட்டல்கள் முழுவதிலும் "Procuring Entity" என்பதால் பதிலீடு செய்யப்படவேண்டும். |
| 03 | 01 | பிரிவு 1.3.2 (ஆ) | ஆங்கிலம் | "Officer" என்ற சொல் ஆங்கில மொழியிலான வழிகாட்டல்களில் "Official" என்ற சொல்லாகக் கொள்ளப்பட வேண்டும். |
| 04 | 02 | பிரிவு 2.8 தலைப்பு | சிங்களம்,தமிழ், ஆங்கிலம் | பெறுகை குழுக்களது, விலைமனு மதிப்பீட்டுக் குழுக்களது, ஏற்கும் குழுக்களது, மாறுபாட்டு மீளாய்வுக் குழுக்களின், பெறுகை மேன்முறையீட்டுக் குழுக்களின் உறுப்பினர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பெறுகை செயன்முறையில் உதவும் உத்தியோகத்தர்கள் என்போருக்கான கொடுப்பனவுகள். |
| | | 2.8 (அ) | சிங்களம், தமிழ், ஆங்கிலம் | பெறுகைக் குழுக்களதும், விலைமனு மதிப்பீட்டுக் குழுக்களதும், ஏற்கும் குழுக்களதும், மாறுபாட்டு மீளாய்வுக் குழுக்களினதும், பெறுகை மேன்முறையீட்டுக் குழுக்களினதும் உறுப்பினர்கள், பதவிநிலை |
| | | | | அலுவலர்கள், மற்றைய அலுவலர்கள் மற்றும் மாற்று உறுப்பினர்கள் ஆகியோருக்கும், இந்த வழிகாட்டல்களின் கீழ் விசேட பொறுப்புகளைக் கொண்டுள்ள அலுவலர்களுக்கும் பெறுகைச் செயன்முறையில் பங்குபற்றுதலுக்கான கொடுப்பனவு வழங்கப்படவேண்டும். |
| 05 | 03 | பிரிவு 3.2 (அ) | சிங்களம். | பொருட்களின் மேலதிக அளவுக்கான விநியோகக் கட்டளையொன்றை, அதே வழங்குநரிடம் பிறப்பித்தலானது (மீள் கட்டளை) கருத்திற்கொள்ளப்படலாம் என்பதுடன், அவ்வாறான மீள் கட்டளையானது மூலக்கட்டளை வழங்கப்பட்டதிலிருந்து ஆறு (06) மாதங்களுள் வழங்கப்படும். |

| தொடர் இல | அத்தியாயம் | பிரிவு | திருத்தப்பட வேண்டிய மொழி | முன்வைக்கப்படும் திருத்தம் |
|---|---|---|---|---|
| 06 | 07 | பிரிவு 7.7 | சிங்களம்,<br>தமிழ்,<br>ஆங்கிலம் | **இரண்டாவது ( 02) கட்டம்:**<br>**படிநிலை 01 -**<br>இந்தப் படிநிலையின் நோக்கமானது, விலைமனுதாரர், தகுதியானவரா, விலைமனு சட்ட ரீதியாகச் செல்லுபடியானதா, விலைமனுவுக்கான படிவம் அதிகாரமளிக்கப்பட்ட தரப்பினரால் கையொப்பமிடப்பட்டுள்ளதா, விலைமனு முழுமையானதா விலைமனு நிபந்தனைக்குட்படாததா, விலைமனு அதற்குரிய பிணையை/ பிணைப் பிரகடனத்தைக் கொண்டுள்ளதா, தேவைப்படும் சட்டபூர்வமான எல்லா ஆவணங்களும் விலைமனுவுடன் உள்ளனவா ஆகிய விடயங்களை ஆராய்ந்தறிவதாகும். |
| 07 | 08 | பிரிவு 8.2 | சிங்களம்,<br>தமிழ்,<br>ஆங்கிலம் | கையேட்டின் தொடர்புடைய குறிப்புகள் பின்வருமாறு குறிப்பிடப்பட வேண்டும்: "கையேட்டின் 8.2 ஐப் பார்க்கவும்", |
| 08 | 11 | பிரிவு 11.3 (இ) | ஆங்கிலம்,<br>தமிழ், | மோட்டார் வாகனத் திருத்த வேலைக் கோரிக்கையின் ஆரம்பத்திலிருந்து அது முடிவுற்று, கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் வரை, மேற்பார்வை செய்வதற்காகவும், திருத்த வேலைகளைச் சிபார்சு செய்வதற்காகவும் பொருத்தமான குழுவொன்றைப் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கலாம். |

EOG 05 - 0198

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது